மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: என்ன காரணம் என்பதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் விடை சொன்னேன்.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்ட கடைகள்

***658 வினா—திரு. கரு. சிமைச்சாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பர்மிய அகதிகளுக்காக திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கத்தில் கடைகள் கட்டப்பட்டுள்ளனவா?

இ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) பர்மா அகதிகளுக்காக பன்னிரண்டு கடைகளும், சாலைக்கடைகளும் ஸ்ரீரங்கம் நகராட்சியால் கட்டப்பட்டன. பர்மா அகதிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் இல்லாததால் அவை அனைத்தும், அகதிகளில்லாத பிறருக்கு 1—12—1969 முதல் ஒரு ஆண்டுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பர்மாவிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளுக்குக் கட்டிக் கொடுக்கும் கடைகளைக் குறைந்த அளவு வாடகையில் கொடுக்க அரசு முயற்சிக்குமா? சென்னையிலும் அது போன்று கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படித்தான் முயற்சிக்கப்படுகிறது. 549 கடைகள் கட்டப்பட்டன. 422 கடைகளைப் பர்மா அகதிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறி பிடட காலம் வரை பார்த்து யாரும் வராத காரணத்தான் பிறருக்கு மீதமுள்ள கடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 67 பெட்டிக் கடைகள் முனிசிபாலிடிக்குப் பணம் கொடுத்து பர்மா அகதிகளுக்காகக் கட்டியும் பர்மா அகதிகள் வரவில்லை. பத்திரிகைகளில் எல்லாம் கூட அதுபற்றிப் பிரசுரிக்கப் பட்டிருக்கிறதி இதுதான் இப்போது இருக்கும் நிலை.

திரு. எம். எஸ். மணி: திருச்சி நகரத்தில் இரண்டு இடங்களில் பர்மா அகதிகளுக்குக் கடைகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டது, அமைச்சர் அவர்களிடமும் நேரடி யாகத் தரப்பட்டது. அந்தக் கடைகளை உடனடியாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது பரிசீலிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன்: திருச்சி, ஸ்ரீரங்கத்தில் எவ்வளவு கடைகள் பர்மா அகதிகளுக்காகக் கட்டப்பட்டன? எத்தனை இடங்களில் அவர்கள் கடைகள் வைத்திருக்கிறார்கள்?

1970 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மொத்தம் 12 கடைகள் ஸ்ரீரங்கத்தில் ஒரு இடத்தில் கட்டப்பட்டது. அந்த இடம் சரியாக இல்லை என்ற காரணத்தால் திருவானைக்காவல் சன்னதி தெருவுக்கு 11 கடைகளும், காந்தி ரோட்டுக்கு ஒரு கடையும் மாற்றப்பட்டது. அங்கும் பர்மா அகதிகள் வராததால் அந்த ஊர்க்காரர்களுக்கு ஒரு வருஷத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: பர்மா அகதிகளுக்கான கடைகளைக் கட்டிக் கொடுக்கும்போது முக்கியமான இடங்களில் கட்டிக் கொடுத்தால்தான் வியாபாரம் நடக்கும். சென்னை நகரிலும் அவர்களுடைய கடைகளுக்குப் பாதுகாப்பான ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற முக்கிய நகரங்களில் எல்லாம் பஜார்களில் அவர்களுக்கான கடைகளைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கத்தினர் சொன்னது போல் நிரம்ப இதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. எடுக்கப்பட்ட முயற்சிகளிலேயே பர்மா அகதிகள் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் தற்போதைய நிலை.

Provident Fund for labourers

* 659 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the benefits of provident fund contribution are to be extended to all industrial employees in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு தமிழ் நாடு அரசுத் தொழில் நிறுவனங்கள் பணியாளர் (உதவித் தொகையுடன் கூடிய) வருங்கால வைப்பு நிதி விதிகள் நிதித்துறையில் 26—12—1969 அன்று வெளியான 1883-ஆம் அரசு ஆணையில் வெளியிடப்பட்டன. அந்த விதிகள் 1952-ஆம் ஆண்டு ஊழியர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தக்கூடிய தமிழ் நாடு அரசு தொழில் நிறுவனங்களின் ஊழியர்கள் அனைவருக்கும் பயன் படுத்தப்படும் என்றும், சட்டப்படிக்கான பணி விதிகளால் முறைப்படுத்தப்பட்டு ஓய்வூதியம் பெறத்தக்க பணியைச் சேர்ந்தவர்கள் இந்த விதிகளின் கீழ் வரமாட்டார்கள் என்றும் அந்த அரசு ஆணையில் ஆணையிடப்பட்டிருந்தது. இந்த விதிகள் 18—5—1958 அன்று செயலுக்கு வந்துள்ளன.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவரவர்களே, தொழிலாளர்கள் பிராவிடெண்ட் பண்டிலிருந்து லோன்கள் பெறுவதற்கு விதிகள் மிகவும் கட்டுப்பட்டிருப்பதால், கல்யாணத்திற்கும், படிப்பிற்கும்தான் என்றிருந்தது, அவர்களுக்(மற்றவை